# உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் இன்னும் செல்லுபடியாகும் நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் மட்டுமே இரத்துச் செய்யப்பட முடியும்!

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க



2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் இன்னும் செல்லுபடியாகும் என்றும், அவை நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் மட்டுமே இரத்துச் செய்யப்பட முடியும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்ற பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஆலோசனைக் குழு, உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பு-மனுக்களை இரத்துச் செய்ய ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியிருந்தது.

அயினும். வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கான ஆலோசனைக் குழுவின் தீர்மானம் எதையும் செய்யாது என்றும், வேட்புமனுக்களை இரத்துச் செய்ய வேண்டுமானால், அதை நாடாளுமன்ற சட்டத்தின் மூலம் மட்டுமே செய்ய முடியும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் 9 ஆம் திகதி நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்த உள்ளூராட்சித் தேர்தலானது நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு மற்றும் திறைசேரியால் தேவையான நிதி விடுவிக்கப்படாத நிலையில் ஏப்ரல் 25 க்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

அந்த நேரத்திலும் நிதி வெளியிடப்படாததால், மீண்டும் தேர்தலை காலவரையின்றி தேர்தல்கள் ஆணைக்குழு ஒத்திவைத்ததால், வேட்புமனுவைத் தாக்கல் செய்த அரச அதிகாரிகள் பலர் பல்வேறு சிரமங்களை சந்திக்க நேரிட்டது.

எவ்வாறாயினும், வேட்புமனுக்களை இரத்துச் செய்வதால் சுமார் 1000 கோடி இழப்பு ஏற்படும் என்றும், இது மக்களின் வாக்குரிமையை பறிக்கும் செயல் என்றும் எதிர்க்கட்சி மற்றும் சிவில் அமைப்புகளிடமிருந்து விமர்சனங்கள் எழுந்த நிலையிலும் வேட்புமனுக்களை இரத்துச் செய்ய ஆலோசனைக் குழு முடிவு செய்திருந்தது. (04)


# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 11 வியாழக்கிழமை 28.09.2023 கதிர் 81







## துப்பாக்கி உரிமங்களைப் புதுப்பித்தல் பாதுகாப்பு அமைச்சின் அறிவித்தல்

தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் துப்பாக்கி உரிமங்களைப் புதுப்பித்தல் குறித்த அறிவிப்பை பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ளது.

துப்பாக்கி உரிமங்களை எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் புதுப்பிக்கலாம் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

தேவையான விபரங்களை பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.defence.lk) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இதேநேரம் 2024 ஆம் ஆண்டிற்கான துப்பாக்கி உரிமம் புதுப்பிக்கும் நடவடிக்கை டிசம்பர் 31க்குப் பின்னர் மேற்கொள்ளப்படாது என பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. துப்பாக்கிச் சட்டத்தின் பிரிவு 22 இன் விதிகளின்படி உரிமம் இல்லாமல் துப்பாக்கியை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றம் என்றும் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், 2024 - 2025 ஆம் ஆண்டிற்கான தனியார் பாதுகாப்பு நிறுவனங்களின் பதிவை எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரை புதுப்பிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காலக்கெடுவிற்குப் பிறகு செய்யப்படும் எந்தவொரு புதுப்பித்தல்களுக்கும் அபராதம் அல்லது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (க)

## இரண்டாவது தவணை இலங்கைக்கு விரைவில்! அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நம்பிக்கை



சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணையை இலங்கை விரைவில் பெறும் என முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் முழுமையான பொருளாதார மீட்சி இன்னும் உறுதி செய்யப்படவில்லை என சர்வதேச நாணய நிதியம் நேற்று அறிவித்திருந்த நிலையில் அவர் இவ்வாறு 2

## தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டம் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அழைப்பு

யாழ்ப்பாணம் தையிட்டியில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்டதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்ற விகாரைக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற போராட்டத்திற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மக்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளனர்.

தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிராக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராலும் பொதுமக்களாலும் தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் ஒவ்வொரு பௌர்ணமி தினங்களிலும் நடைபெறும் இந்தப் போராட்டம் இன்றும் மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகி நாளை மாலை 6 மணிக்கு நிறைவு பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தப் போராட்டத்தில் அனைத்து மக்களையும் கலந்து கொள்ளுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் அழைப்பு விடுத்துள்ளனர். (க)

## 7 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுப்பு!

சீரற்ற வானிலை காரணமாக 7 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 3 மாவட்டங்களுக்கு இரண்டாம் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, களுத்துறை மாவட்டத்தின் இங்கிரிய பிரதேசம், கண்டி மாவட்டத்தின் பஸ்பாகே கோரளை பிரதேசம், மாத்தறை மாவட்டத்தின் கொட்டபொல மற்றும் பிட்டபெத்தர பிரதேசம் மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தின் இரத்தினபுரி பிரதேசம் ஆகிய பகுதிகளுக்கு இரண்டாம் கட்ட மண் சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி கடந்த 24 மணித்தியாலங்களில் குறித்த பிரதேசங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்துள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்து மழை பெய்தால், மண்சரிவு, பாறைச்சரிவு, நிலம்தாழிறக்கம் குறித்து அவதானமாக இருக்குமாறும், தேவைப்பட்டால் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லத் தயாராக இருக்குமாறும் அப்பகுதி மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில், 2

## சிறுமியின் கையை கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவபீட விசேட உடற்கூற்று நிபுணர் ஊடாகப் பரிசோதிக்கவேண்டும்!

### யாழ்.நீதவான் நீதிமன்று உத்தரவு பிறப்பித்தது

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற மருத்துவத் தவறால் சிறுமியொருவரின் இடது கை, மணிக்கட்டுடன் அகற்றப்பட்ட விவகாரத்தில், சிறுமியின் கையை கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீட விசேட உடற்கூற்று நிபுணர் ஊடாகப் பரிசோதிக்குமாறு யாழ்.நீதவான் நீதமன்று உத்தரவிட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த மாதம் 8 வயதுச் சிறுமி ஒருவர் காய்ச்சல் காரணமாக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இதன்போது சிறுமியின் கையில் பொருத்தப்பட்ட கனுலா உரிய முறையில் பொருத்தப்படாதமையால், சிறுமியின் இடது கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலை, மத்திய சுகாதார அமைச்சு என்பன விசாரணைகளை மேற்கொண்டுவரும் நிலையில், சிறுமியின் பெற்றோரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் ஊடாக யாழ்.நீதவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் குறித்த வழக்கு விசாரணை நேற்றைய தினம் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சிறுமியின் துண்டிக்கப்பட்ட கையை கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீட 2

## மீலாதுன் நபி தினத்துக்கான ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்தி



மீலாதுன்நபி தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது வாழ்த்துச் செய்தியை வெளியிட்டுள்ளார்.

அதில், இஸ்லாம் மார்க்கத்தின் இறைத் தூதரான முஹம்மது நபி அவர்களின் பிறந்தநாளை கொண்டாடும் இலங்கைவாழ் முஸ்லிம் மக்களுக்கும், உலக வாழ் முஸ்லிம் மக்களுக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்து மனிதகுலத்திற்கும் அன்பு மற்றும் அமைதியின் செய்தியைப் பரப்பிய இஸ்லாத்தின் தூதரான முஹம்மது நபி அவர்கள், அல்லாஹ்வின் கடைசி இறைத் தூதராவார்.

அன்றைய சமூகத்தில் இஸ்லாத்தின் தூதை முன்வைப்பதில் நபிகளார் முகங்கொடுத்த 2

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு யாழில் வடக்கின் திருவிழா!

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண தொழிற்துறைத் திணைக்கழம் மற்றும் சுற்றுலாத் துறை என்பவற்றின் ஏற்பாட்டில் வடக்கின் திருவிழா இடம்பெறவுள்ளது.

குறித்த நிகழ்வு யாழ்ப்பாணம் கலாசார நிலையத்தில் நாளை 29 ஆம் திகதி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை நடைபெற ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன.

வடக்கின் திருவிழா நிகழ்வில், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் மற்றும் யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நடராஜ், சுற்றுலாத்துறை சார் நிபுணர்கள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

குறித்த நிகழ்வில் தமிழர் பாரம்பரியத்தை பறைசாற்றும் வகையிலான கிராமிய நடனம், மயிலாட்டம், ஒயிலாட்டம், சிரட்டைக் கும்மி, வசந்தன் கூத்து மற்றும் நர்த்தனம் ஆகியவற்றோடு கைவினைப் பொருட்கள் விற்பனை, உணவு விற்பனை, நீர் விளையாட்டுக்கள் என்பனவும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# சாய்ந்தமருது அல் - ஹிலால் மாணவ நாடாளுமன்ற தேர்தல்

(நூருல் ஹுதா உமர்)

கல்வி அமைச்சின் புதிய சுற்று நிருபம் மற்றும் அறிவுறுத்தல் கோவையின் அடிப்படையில் மாணவர் நாடாளுமன்ற தேர்தல் முறைமை பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் தேர்தல்கள் திணைக்களமும் கல்வியமைச்சும் இணைந்து, பாடசாலைகள் தோறும் மாணவர் நாடாளுமன்றங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

அம்பாறை மாவட்டம் கல்முனை கல்வி வலயத்திற்கு உட்பட்ட சாய்ந்தமருது அல் - ஹிலால் வித்தியாலயத்தில் 2023 ஆம் ஆண்டிற்கான மாணவர் நாடாளுமன்றம் அமைப்பதற்கான வேட்பு மனுக்கள் கோரப்பட்டு தெரிவுக்கான தேர்தல் இன்று பாடசாலை அதிபர் யூ.எல்.நஸார் தலைமையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

தேர்தல் ஆணையாளர் பாடசாலை அதிபர், தேர்தல் நடவடிக்கைகளுக்கான இணைப்பாளர்களாக பிரதி அதிபர், உதவி அதிபர், உதவி தேர்தல் அலுவலகர், சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலகர் பகுதிக்கு பொறுப்பான ஆசிரியர்கள், கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலகர், மேற்பார்வை அலுவலகர், கண்காணிப்பு அலுவலகர் ஆகியோர் தேர்தல் கடமைகளுக்கான உத்தியோகபூர்வ அடையாள அட்டை அதிபர் அவர்களினால் வழங்கி வைக்கப்பட்டதுடன் தேர்தல் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட வாக்குப்பெட்டி, மாதிரி வாக்குச்சீட்டுகளை கொண்டு தேர்தல் நடைபெற்றது.

இந்தப் பாடசாலை மாணவர் பாராளுமன்றத்துக்கு 60 மாணவர் நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு 450க்கு மேற்பட்ட மாணவ, மாணவிகள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதுடன், வாக்களிக்கும் பணிகள் காலை 10 மணி முதல் பிற்பகல்12.30 வரை இடம்பெற்றன. மிக அமைதியான முறையில் மிக நீண்ட வரிசைகளில் நின்று தமது வாக்குகளை ஆர்வமாக பதிவு செய்து சென்றதனை காணக்கூடியதாக இருந்தது.

அத்துடன் நடைபெற்ற பாடசாலை மாணவ தேர்தல் முறையானது தங்களுக்கு புதுவிதமான அனுபவத்தை தந்ததாகவும் இதன் மூலம்தேர்தல் தொடர்பான தங்களது அறிவையும் ஆளுமையையும் அதிகரிக்க



முடிந்ததாகவும் மாணவர்கள் தெரிவித்தனர்.

தெரிவு செய்யப்படும் மாணவ பிரதிநிதிகளைக் கொண்டு மாணவர் நாடாளுமன்றம் தாபிக்கப்படும். இதில் சபாநாயகர், பிரதமர், 10 அமைச்சர்கள், 10 பிரதி அமைச்சர்கள் என இத்தேர்தலின் ஊடக தெரிவு செய்யப்படவுள்ளனர். வாக்குப் பெட்டிகள் அனைத்தும் வாக்கெண்னும் நிலையத்திற்கு பி.ப ஒரு மணிக்கு கொண்டு வரப்பட்டு, வாக்கு எண்னும் பணிகள் நடைபெற்றதையும் காணக்கூடியதாக இருநதது.

## சிறுமியின் கையை கொழும்புப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட உடற்கூற்று நிபுணர் ஒருவர் ஊடாக பரிசோதனைக்கு உட்படுத்த பொலிஸார் கோரியமைக்கு அமைய, பெயர் குறிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஊடாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும் என யாழ் நீதவான் நீதிமன்ற நீதிபதி ஆனந்தராஜா உத்தரவிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து குறித்த வழக்கு எதிர்வரும் 11ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

## மீலாதுன் நபி தினத்துக்கான .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடினமான அனுபவங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அப்படிப்பட்ட தருணத்திலும் பொறுமையும் மௌனமும் தான் அவரின் கூரிய ஆயுதங்களாக இருந்தன. நம்பிக்கை மற்றும் மனிதநேயத்திற்காக அவர் செய்த அளவற்ற தியாகத்தின் விளைவாக, அவர் எதிர்பார்த்த வெற்றியை அடைய முடிந்தது.

பரஸ்பர புரிதல், சகோதரத்துவம், ஒருவருக்கு ஒருவர் உதவி செய்தல், நேர்மை என அவர் வாழ்நாள் முழுவதும் காத்து வந்த பண்புகளை, நபிகள் நாயகத்தின் பிறந்த நாளைக் கொண்டாடும் நாம் நமது நம் வாழ்வில் இலட்சியமாகக் கொள்ள வேண்டும். மேலும், அவரது தத்துவத்தை மேலும் சமூகமயமாக்கவும், நல்லிணக்கத்தை உருவாக்கவும் பணியாற்றுவது அவருக்குச் செய்யக்கூடிய மிக உயர்ந்த மரியாதை என்று நான் நம்புகிறேன்.

நபிகள் நாயகம் காட்டிய விழுமியங்களுக்கு ஏற்ப நாடு எதிர்கொள்ளும் அனைத்துச் சவால்களையும் முறியடித்து 2048 ஆம் ஆண்டளவில் வளர்ந்த இலங்கையை கட்டியெழுப்புவதற்கான பாதையை வலுப்படுத்த அனைத்து இலங்கை முஸ்லிம் சகோதர சகோதரிகளையும் ஒன்றிணையுமாறு கேட்டுக்கொள்கிறேன்? என்று அவர் தெரிவித்துள்ளார். (04)

## 7 மாவட்டங்களுக்கு .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

6 மாவட்டங்களில் உள்ள சில பகுதிகளில் எச்சரிக்கையுடன் இருக்குமாறு மஞ்சள் மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது.

காலி மாவட்டம் - நெலுவ, எல்பிட்டிய, ஹம்பாந்தோட்டை மாவட்டம் - வலஸ்முல்ல, களுத்துறை மாவட்டம் - அகலவத்தை, வல்லாவிட்ட, கேகாலை மாவட்டம் - ருவன்வெல்ல, மாத்தறை மாவட்டம் - முலடியன, அதுரலியா, இரத்தினபுரி மாவட்டம் - கலவான, கொலொன்ன, எஹெலியகொட, குருவிட்ட, கிரியெல்ல, அயகம, எலபாத, நிவித்திகல, பெல்மதுல்ல ஆகிய பகுதிகளுக்கே இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (04)

## இரண்டாவது தவணை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணையை விரைவாகப் பெற்றுக்கொள்வோம் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாகவும், பொருளாதார நெருக்கடியின் மிகவும் கடினமான தருணங்களை வெற்றிகரமாகச் சமாளித்த அரசாங்கம், எதிர்வரும் நாட்களில் அதிலிருந்து முற்றாக விடுபடுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கை, அந்நிலையில் இருந்து மீண்டு வருவதாகவும் அனைத்தையும் சமாளிக்கும் திறன் இலங்கைக்கு இருப்பதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பீட்டர் ப்ரூயர் சுட்டிக்காட்டியதாகவும் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

தற்போது நாடு எதிர்கொண்டுள்ள மேலும் சில தடைகளைக் கடப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

நேற்றைய தினம், விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் கீழ் வேலைத்திட்டத்தின் முதல் மீளாய்வுக்கான இலங்கை விஜயத்தின் நிறைவில், கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் பேசிய சர்வதேச நாணய நிதியத்தின் குழுவினர் இலங்கை அதிகாரிகளுடன் கலந்துரையாடல் தொடரும் என அறிவித்திருந்தனர்.

ஸ்திரத்தன்மைக்கான ஆரம்ப அறிகுறிகள் இருந்த போதிலும், முழுமையான பொருளாதார மீட்சி இன்னும் உறுதி செய்யப்படவில்லை எனவும், இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் இலங்கையை நிலையான வளர்ச்சியை நோக்கிய பாதையில் கொண்டு செல்ல சீர்திருத்த நடவடிக்கை அவசியம் என்றும் அவர்கள் வலியுறுத்தியிருந்தனர். (க)

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com






# கிழக்குப் பல்கலைக்கழக 42ஆவது ஆண்டு விழா பொதுமக்கள் பார்வைக்காக திறக்கப்படுகிறது




(நூருல் ஹுதா உமர்)

இலங்கை, கிழக்குப் பல்கலைக்கழகம் 2023 ஒக்டோபர் மாதம் தனது 42ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடவுள்ளது. இதனடிப்படையில் 2023 ஒக்டோபர் முதலாம் திகதி முதல் 8 ஆம் திகதிவரை பல்கலைக் கழக வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாரத்தை சிறப்பிக்கும் வகையில் இப்பிராந்தியத்தில் உள்ள பொதுமக்களுக்காக ஒக்டோபர் 3 ஆம் திகதி 'திறந்த தினம்' எனும் பெயரில் ஒரு தினத்தை நடாத்த பல்கலைக்கழக சமூகம் முடிவு செய்துள்ளது. இந்நிகழ்வு இப்பல்கலைக்கழக வரலாற்றில் முதன்முறையாக நடாத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழகம் அப்பிராந்திய வளர்ச்சிக்கான ஒரு இயந்திரமாக செயல்படுகிறது. திறந்த தினம் என்பது பொதுமக்கள் பல்கலைக்கழகத்தைச் சுற்றிப் பார்க்கவும், பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன் தொடர்பு கொள்ளவும், அமர்வுகளில் பங்கேற்கவும் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் பரந்த அளவிலான கல்வித் திட்டங்கள் மற்றும் கல்வி வாய்ப்புகள் பற்றிய அறிவைப் பெறவும் வாய்ப்பை ஏற்படுத்தவுள்ளது.

இச்சிறப்பு நிகழ்விற்கு பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், தொழில் முயற்சியாளர்கள், விவசாய மற்றும் மீனவர் சங்கங்கள் மற்றும் சிறுதொழில் துறையினரையும் பல்கலைக்கழகத்திற்கு வருகை தருமாறு பல்கலைக்கழக நிருவாகம் அழைப்பு விடுக்கின்றது.

இத்தினத்தில் பங்குபற்றுவோருக்கு பின்வரும் விடயங்கள் தொடர்பாக பெறுமதியான விளக்கவுரைகள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை, அறிவியல் சோதனைகள் தொடர்பான நடைமுறை விளக்கங்கள் மற்றும் செயல் விளக்கங்கள், கல்விச் சூழலின் கண்ணோட்டம், நூலக வசதிகளைப் பெற்றுக் கொள்ளல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவூட்டல், பல்கலைக்கழக மாணவர் அனுமதி நடைமுறை குறித்த வழிகாட்டுதல், பல்கலைக கழக வாழ்க்கை மற்றும் கல்வி வாழ்க்கையின் வேறு அம்சங்கள் போன்ற விடயதானங்களில் விளக்கவுரைகள் வழங்கப்படவுள்ளன.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் இச்சிறப்பு நிகழ்வில் பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் பிற சமூகங்களின் பங்கேற்பை பல்கலைக்கழக சமூகம் வரவேற்கின்றது. இதனூடாக பொதுமக்கள் பல்கலைக்கழக நடைமுறை தொடர்பான அவர்களது வாழ்க்கையில் மறக்க முடியாத அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# இலங்கை ஒலிம்பியாட் கணிதப் போட்டியில் இறக்காமம் மத்திய கல்லூரி மாணவனான நாசிப் அமர் விசேட சித்தியைப் பெற்றார்



(நூருல் ஹுதா உமர்)

தேசிய ரீதியில் இடம்பெற்ற இலங்கை ஒலிம்பியாட் கணிதப் போட்டியில் இறக்காமம் மத்திய கல்லூரியில் தரம் 9 இல் கல்வி பயிலும் மாணவர் முஹம்மத் பெரோஸ் நாசிப் அமர் பங்கு பற்றி விசேட சித்தியினைப் பெற்றுள்ளார்.

இலங்கை ஒலிம்பியாட் கணித மன்றம் என்பது பாடசாலை மட்டத்தில் கணிதத்தை பிரபலப்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு அமைப்பாகும். இது இலங்கை கணித ஒலிம்பியாட் போட்டியினை ஆண்டுதோறும் நடத்துகிறது. சர்வதேச கணித ஒலிம்பியாட் ஆசிய பசிபிக் கணித ஒலிம்பியாட் மற்றும் சர்வதேச கணிதப் போட்டி போன்ற சர்வதேசப் போட்டிகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்த அணிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறது.

தனிப்பட்ட பரீட்சார்தியாக தோற்றிய குறித்த மாணவர் இதற்கு முன்னரும் தரம் 6 இல் கல்வி பயின்றபோது தரம் 8 மாணவர்களுக்கான குறித்த போட்டியில் மட்டக்களப்பு மெதடிஸ்ட் மத்திய கல்லூரி சார்பாக பங்குபற்றி உயர் சித்தியினைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அது மாத்திரமன்றிஇ குறித்த மாணவர் பாடசாலை கல்விக்கு மாத்திரம் முக்கியத்துவம் அளிப்பதுடன் பகுதி நேர வகுப்புகளுக்கு செல்லாது சுய கற்றலில் அதிக ஆர்வமுடன் ஈடுபடுவதன் காரணமாக தனது வகுப்பிலும் முதன்மையானவராக திகழ்கின்றார்.

இவ்வருடம் இம்மாணவரின் சுய முயற்சியினால் உருவாக்கப்பட்டு இயக்கப்பட்ட "The Future Student" எனும் ஆங்கில நாடகம் கோட்டம், வலயம், மாவட்ட மட்டத்தில் வெற்றி பெற்றதுடன் இறக்காமம் மத்திய கல்லூரியின் பெயரை வரலாற்றில் முதன் முதலில் கடந்தவாரம் இடம்பெற்ற ஆங்கில தின மாகாண மட்ட போட்டியில் ஒலிக்கச் செய்திருந்தார்.

கல்வி அமைச்சினாலும் தேசிய நூலகத்தினாலும் முன்னெடுக்கப்பட்ட ஆயிரம் புத்தகங்களை உருவாக்கும் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் இம்மாணவரால் எழுதப்பட்ட "கொரோனா கால சிறுகதைகள்" எனும் நூல் தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கான சான்றிதழையும் பெற்றுள்ளார்.

கல்வியில் ஆர்வமும் சிறுவயதில் சமூக அக்கறையும் நற்பண்புகளையும் கொண்டுள்ள இம்மாணவர் சட்டத்தரணி பீ.எம்.எம்.பெரோஸ் (eoPkp) மற்றும் வைத்தியர் நஸ்ரின் பானு ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும் ஆவார்.



# கல்முனை மாநகரில் மீலாதுன் நபி விழா

(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர பொதுச் சந்தை வர்த்தக சங்கம் ஏற்பாடு செய்திருந்த மீலாதுன் நபி விழா இன்று வியாழக்கிழமை பொதுச் சந்தை முற்றத்தில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் ஏ.பி. ஜமால்தீன் ஹாஜியார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி, பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, மாநகர உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம் உள்ளிட்டோர் அதிதிகளாகப் பங்கேற்றிருந்தனர்.

கல்முனை அஹ்லுல் சுன்னத்வல் ஜமாஅத் செயலாளர் மௌலவி முஹம்மத் நாஸர், மீலாதுன் நபி விழாவுக்கான சிறப்புச் சொற்பொழிவை நிகழ்த்தினார். சந்தை வர்த்தகச் சங்கத்தின் செயலாளர் ஏ.எல்.கபீர் விழா நிகழ்வுகளை நெறிப்படுத்தியிருந்தார். இதன்போது வர்த்தகர்கள் மற்றும் பொது மக்களுக்கு மீலாத் கந்தூரியும் விநியோகிக்கப்பட்டது.




தொழிற்துறைத் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Tourism
Northern Province
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
உலக சுற்றுலா தினம்
2023
செப்டெம்பர்
27, 28, 29
மாலை
4.00 மணி
தொடக்கம்
இரவு
9.00 மணி
வரை
இடம் :- யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகம்
உணவு மற்றும் கைப்பணிப் பொருள் சந்தை
கலாசாரத் திருவிழா
அனுசரணையாளர்கள் :-
HNB
BANK OF CEYLON
BOC
Bankers to the Nation
The Thinnai
Jetwing
JAFFNA
TILKO
JAFFNA CITY HOTEL
The Valampuri
RAJAH CREAM HOUSE
A1
Chrysalis
Catalyzing change
ஊடக அனுசரணையாளர் :-
காலைக்கதிர்
Kalaikkathir
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# இந்தியாவில் 40 வீதத்துக்கும் அதிகமான முதியவர்கள் ஏழ்மை நிலையிலுள்ளதாக ஐ.நா. அறிக்கை தெரிவிப்பு



இந்தியாவில் உள்ள முதியவர்களில் ஐந்தில் இரண்டு பங்குக்கும் அதிகமானோர் அதாவது, 40 சதவீத்துக்கும் அதிகமான முதியவர்கள் ஏழ்மை நிலையில் உள்ளனர் எனப் புதிய ஐ.நா. அறிக்கை கூறுகிறது.

அவர்களின் வேலை, ஓய்வூதியம் மற்றும் வருமான நிலை ஆகியவற்றின் பகுப்பாய்வுப்படி 18.7 சதவீத முதியவர்களுக்கு வருமானம் இல்லை என்பதை அது காட்டுகிறது. இந்த வீதம் 17 மாநிலங்களில் தேசிய அளவை விட அதிகமாக உள்ளமையும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

உத்தரகாண்டில் 19.3 சதவீதம் முதல் இலட்சத்தீவில் 42.4 சதவீதம் வரை வருமானமின்மை உள்ளது. வயதானவர்களிடையே இந்த அளவு வறுமை, அவர்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதார நிலையைப் பாதிக்கலாம் என அந்த அறிக்கை சுட்டிக்காட்டி உள்ளது.

இந்தியாவில் வயதான பெண்களுக்கு அதிக ஆயுட்காலம் இருப்பதாகவும் குறித்த ஆய்வு முடிவு கூறியுள்ளது. இதனால், வயதான பெண்கள் விதவைகளாகவும், தனியாகவும், சொந்தமாக வருமானம் இல்லாமலும் குடும்பத்தையே முழுமையாகச் சார்ந்து வாழும் நிலையிலும் உள்ளனர். இதனால், இவர்களின் சமூக மற்றும் பொருளாதார நல்வாழ்வு கவலை அளிப்பதாக அறிக்கை கூறியுள்ளது. (04)



## பருவநிலை மாற்றத்துக்கு ஏற்றவாறு திட்டங்களை வகுத்திடக் கிரீஸ் முடிவு

பருவநிலை மாற்றத்துக்கு ஏற்றவாறு தங்களை மாற்றிக் கொள்வது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக உருவாகியுள்ளதாகக் கிரீஸ் நாட்டு அரசு அறிவித்துள்ளது.

மத்திய கிரீஸ் கனமழையால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. சாலைகள் சேதமடைந்துள்ளன. வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. கிரீஸின் எவியாத் தீவு மின்சாரமின்றித் தவித்து வருகின்றது. சாலைகளைச் சீரமைக்கும் பணியில் இராணுவம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. தீயணைப்புத் துறையினர் வெள்ளத்தில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பாகத் பேசிய கிரீஸ் நாட்டின் பிரதமர், பருவநிலை மாற்றத்துக்கு நாம் கவனம் கொடுக்க வேண்டும். பருவநிலை நெருக்கடிகளுக்கு ஏற்றவாறு நம்மை மாற்றிக் கொள்வது அவசியம். பருவநிலை மாற்றத்துக்கு ஏற்றவாறு நாம் திட்டங்களை வகுப்பது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக மாறியுள்ளது என்று தெரிவித்திருக்கிறார். (04)

## இத்தாலியில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்!



இத்தாலியின் நேப்பல்ஸ் பகுதிக்கு அருகே நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குச் சக்திவாய்ந்த நிலநடுக்கம் இது என்று தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து அந்த நாட்டின் நிலவியற்பியல் மற்றும் புயல் ஆய்வு மையம் வெளியிட்டுள்ள தகவலில், நேப்பல்ஸ்'க்கு மேற்கே புதன்கிழமை அதிகாலை 3.35 மணிக்கு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவுகோலில் இந்த நிலநடுக்கம் 4.2 அலகுகளாகப் பதிவானது.

அந்தப் பகுதியில் 40 ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்பட்டுள்ள அதிக சக்திவாய்ந்த நிலநடுக்கம் இதுவாகும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தின் அதிர்வுகள் நேப்பல்ஸ் பகுதியில் நன்கு உணரப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இருந்தாலும், நிலநடுக்கத்தால் ஏற்பட்டஉயிர், பொருள் சேத விபரங்கள் குறித்து தகவல்கள் வெளியாகியிருக்கவில்லை. (04)

## ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்ட ஆய்வுப்பணிகள் நடந்து வருகின்றன - சட்ட ஆணைக்குழு தகவல்




சிக்கலான சட்டப் பிரச்சினைகளில் இந்திய அரசுக்கு அறிவுரை வழங்குவதற்காக 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை சட்ட ஆணைக்குழு அமைக்கப்பட்டு வருகிறது. நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தும் ஒரே நாடு – ஒரே தேர்தல் என்ற திட்டம் தொடர்பாக இந்த சட்ட ஆணைக்குழு ஏற்கனவே ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த விவகாரம் பல ஆண்டுகளாகச் சட்ட ஆணைக்குழுவின் பரிசீலனையில் இருந்து வருகிறது. பல்வேறு பரிந்துரைகள், ஒரே நேரத்தில் தேர்தல்களை நடத்து வது ஜனநாயகம், அரசியலமைப்பு அடிப்படைக் கட்டமைப்பு அல்லது நாட்டின் கூட்டாட்சித் தத்துவம் ஆகியவற்றுடன் எந்த வகையிலும் முரண்படுமா? என்பது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் தொடர்பாகப் பல்வேறு தரப்பினருடனும் இந்த ஆணைக்குழு கருத்துகளைக் கேட்டிருந்தது.

இதைப்போல எந்த அரசியல் கட்சிக்கும் ஆட்சி அமைக்க பெரும்பான்மை இல்லாத நிலையில், தொங்கு நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றம் என்ற சூழல் வந்தால் அதைச் சமாளிப்பது தொடர்பாகவும் ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படையில் 3 கருத்துகளை முந்தைய சட்ட ஆணைக்குழு வழங்கியிருந்த நிலையில், பல்வேறு பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வு காணப்படாமல் உள்ளது.

இந்த நிலையில் தற்போதைய சட்ட ஆணைக்குழு இந்த விடயத்தில் அடுத்தகட்ட ஆய்வுப்பணிகளை ஆரம்பித்திருக்கிறது. ஒரே நாடு, ஒரே தேர்தல் தொடர்பான நடவடிக்கைகள் தற்போது வேகம் பெற்று வரும் நிலையில், சட்ட ஆணைக்குழுவின் நிலை குறித்த கேள்வியும் எழுந்துள்ளது. இந்த ஆய்வுப்பணிகள் தொடர்ந்து நடந்து வருவதாக சட்ட ஆணைக்குழு கூறியுள்ளது.

சட்ட ஆணைக்குழுவின் தலைவரும், ஓய்வு பெற்ற நீதிபதியுமான ரிதுராஜ் அவஸ்தி நேற்று செய்தியாளர்களிடம் கூறுகையில், 'ஒரே நாடு, ஒரே தேர்தல் தொடர்பாக இன்னும் சில பணிகள் நடைபெற வேண்டியுள்ளது. நாங்கள் அறிக்கையை இன்னும் இறுதி செய்யவில்லை. அதற்காகக் காலக்கெடு எதுவும் இல்லை' எனத் தெரிவித்தார்.

இந்த விவகாரத்தில், சட்ட அமைச்சகத்துக்கு வழங்கப்படும் அறிக்கை பின்னர் சம்பந்தப்பட்ட அமைச்சகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (04)


வட மாகாண
சுற்றுலாப் பணியகமும்
தொழிற்துறைத் திணைக்களமும்
இணைந்து நடாத்தும்
உலக சுற்றுலா தினம் - 2023
வடக்கின் திருவிழா
பாரம்பரிய இசை மற்றும் நடன நிகழ்வுகள்
கைவினைப் பொருட்கள் விற்பனை
உணவு விற்பனை
நீர் விளையாட்டுக்கள்
29.09.2023
காலை 09.00 - இரவு 09.00
WORLD TOURISM DAY 2023
TOURISM & GREEN INVESTMENTS
இடம்: யாழ்ப்பாண கலாசார நிலையம்
ஊடக அனுசரணை :
காலைக்கதிர்
Kalaikkathir

# உள்ளூராட்சிச் சபை ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க கிழக்கு ஆளுநர் கோரிக்கை

## அமைச்சரவை அங்கீகாரம் பெறப் பிரதமர் உறுதி



(ஏ.எஸ்.மௌலானா)

பிரதமர் தினேஸ் குணவர்தனவுக்கும் மாகாண ஆளுநர்களுக்கும் இடையிலான விசேட சந்திப்பு கடந்த செவ்வாய்க்கிழமை அலரி மாளிகையில் இடம்பெற்றது.

இதன்போது கிழக்கு மாகாணத்தில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதமரிடம் எடுத்துரைத்தார்.

இதில் ஓர்அம்சமாக, கிழக்கு மாகாண உள்ளுராட்சி மன்றங்களில் பல வருட காலமாகத் தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றி வருகின்ற ஊழியர்களுக்கு நிரந்த நியமனம் வழங்கப்படாத நிலையில் கணிசமானவர்கள் பணிபுரிகின்றனர் எனவும், இவர்களை நிரந்தரமாக்குவதற்கான வயதையும் தாண்டிய நிலையில் பலர் உள்ளனர் எனவும், நாட்டில் காணப்படும் பொருளாதார நெருக்கடியைக் கருத்தில் கொண்டு இவர்களுக்கு அவசரமாக நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநர் வலியுறுத்தினார்.

ஆளுநரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பிரதமர் உள்ளூராட்சிச் சபை ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க எதிர்வரும் வாரங்களில் அமைச்சரவை அங்கீகாரம் பெறத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதியளித்தார்.

# உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் மரபுரிமைப் பாதுகாப்பு விழிப்புணர்வு



உலக சுற்றுலாத் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் தொல்லியல் திணைக்களம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரி ஆகியன இணைந்து சிரமதானத்தையும் மரபுரிமைப் பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் விழிப்புணர்வுப் பலகைத் திரை நீக்கத்தையும் நடாத்தியிருந்தன.

உலக சுற்றுலாத் தினத்தை முன்னிட்டு இலங்கையின் புராதன சின்னமாக விளங்குகின்ற யாழ்ப்பாணம் கோட்டையை அண்டிய பகுதிகள் சிரமதானப்பணி மூலம் நேற்றுச் சுத்தம் செய்யப்பட்டன

கோட்டை வெளிப்புறத்தில் முதன்முதலாக ஏ.ஆக.கமல் படப்பிடிப்பாளர்கள், சாயி போட்டோ நிறுவனத்தினரின் அனுசரணையுடன் மரபுரிமைப் பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பான பலகையும் தொல்லியல் திணைக்களத்தினரால் நாட்டப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது

யாழ் தொல்லியல் திணைக்களத்தின் யாழ்ப்பாணக் கோட்டைப் பொறுப்பதிகாரி பாலசுப்பிரமணியம் கபிலன், திணைக்கள அதிகாரிகள், யாழ் பல்லைக்கழகக் கல்லூரி விரிவுரையாளர்கள், மாணவர்கள் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கலந்து கொண்டிருந்தனர். (01)




# தொலையுணர்வுச் செயற்கைக்கோளை வெற்றிகரமாகச் செலுத்தியது ஈரான்



தனது தொலையுணர்வுச் செயற்கைக்கோள் ஒன்றை ஈரான் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

தனது தொலையுணர்வுச் செயற்கைக்கோள் ஒன்றை ஈரான் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது. இது குறித்து அந்த நாட்டுத் தகவல்தொடர்புத் துறை அமைச்சர் இஸா ஜரேபூர் நேற்றுத் தகவல் வழங்கியுள்ளார்.

விண்வெளியிலிருந்து படமெடுக்கக் கூடிய தொலையுணர்வுச் செயற்கைக்கோளான 'நூர்-3' வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. பூமிக்கு 450 கிலோ மீற்றர் தொலைவிலிருந்தபடி அந்த செயற்கைக்கோள் செயல்படும் என்றார் அவர்.

ஈரான் அணு ஆயுதம் உருவாக்குவதைத் தடுப்பதற்காக அந்த நாட்டின் மீது அமெரிக்காவும், பிற மேற்கத்திய நாடுகளும் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. அத்தகைய அணு ஆயதங்களை ஏந்த, தொலைதூரத்தில் தாக்குதல் நடத்தக் கூடிய 'பலிஸ்டிக்' வகை ஏவுகணைகளை ஈரான் ஆய்வு செய்வதற்கும் ஐ.நா. பாதுகாப்பு அமைப்புத் தடை விதித்துள்ளது.

அந்தத் தடைகளை மீறி ஈரான் அவ்வப்போது ஏவுகணைச் சோதனைகளை மேற்கொள்ளும்போது ஈரானுக்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் இடையே பதற்றம் அதிகரிப்பது வழக்கம். இந்தச் சூழலில், விண்ணில் செயற்கைக்கோளை செலுத்துவதற்கான ரொக்கெட்டிலும் பலிஸ்டிக் ஏவுகணை தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும் என்பதால், நூர்-3 செயற்கைக் கோளை ஈரான் விண்ணில் செலுத்தியுள்ளமை அத்தகைய பதற்றத்தை மீண்டும் அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது. (04)

# வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் கோவில் இரதோற்சவம் இன்று










யாழ்ப்பாணம் வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் கோவில் வருடாந்த மஹோற்வத்தின் இரதோற்சவம் பக்தர்கள் புடைசூழ இன்று வெகு சிறப்பாக இடம்பெற்றது.

வடக்கிலுள்ள விஷ்ணு ஆலயங்களில் மிகவும் பழமையும் தொன்மையும் வாய்ந்ததாக அறியப்படும் வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த 14 ஆம் திகதி கொடியேற்றதுடன் ஆரம்பமாகி திருவிழா இடம்பெற்றுவந்தது.

ஆலயப் பிரதமகுரு தலைமையில் இடம்பெற்ற வசந்த மண்டப பூஜைகளை தொடர்ந்து விஷ்ணுபகவான் காலை 8.30 மணியளவில் தேரில் ஆரோகணித்து வீதியுலா சென்றார்.

வரலாற்றுச்சிறப்பு மிக்க இந்த நிகழ்வைக்கண்டு பெருமாளின் அருளைப் பெற்றுக்கொள்ள நாட்டின் பலபாகங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் ஆலயத்தில் திரண்டிருந்தனர். (01)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.09.2023இல் வெளியிடப்பெற்றது.